



admin@dhinakani.com

RNI-TNTAM/2023/88253

# நமது தினகனி

NAMADHU DHINA KANI

www.dhinakani.com

காலை நாளிதழ்






மலர்:03 | இதழ்:223 | 4 பக்கங்கள் | 12:03:2026 | வியாழக்கிழமை | விலை ரூ,6 | வருடசந்தா ரூ,1825




இலனென்னும் எவ்வம் உரையாமை ஈதல் குலனுடையான் கண்ணே யுள.

**விளக்கம்:**
இரந்துவந்தார்க்கு இலனென்னா நின்ற துன்பத்தைக் கூறாது ஈதலும் குடிப்பிறந்தான்மாட்டே யுளதாம். இது கொடுக்குங்கால் மாறாது கொடுக்க வேண்டுமென்றது.

## ஈரானின் புதிய உச்ச தலைவரை நாங்கள் மதிக்கிறோம்: வட கொரியா



பியாங்யாங்: ஈரானின் புதிய உச்ச தலைவர் தேர்ந்தெடுக்கப்பட்டதை வட கொரியா மதிக்கிறது என்று அந்நாட்டின் வெளியுறவு அமைச்சக செய்தித் தொடர்பாளர் தெரிவித்துள்ளார்.பிப்ரவரி 28 அன்று அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் நடத்திய வான்வழித் தாக்குதலில் ஈரானின் உச்ச தலைவர் அயத்துல்லா அலி காமேனி கொல்லப்பட்டார். அதனையடுத்து அவரின் மகன் மோஜ்தபா காமேனி ஈரானின் புதிய உச்ச தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டார்.இதுகுறித்து வெளியுறவு அமைச்சக செய்தித் தொடர்பாளர் கூறியதாக அதிகாரப்பூர்வ கொரிய மத்திய செய்தி நிறுவனம் (KCNA) வெளியிட்ட செய்திக்குறிப்பில், 'ஈரானிய மக்கள் தங்கள் உச்ச தலைவரைத் தேர்ந்தெடுப்பதற்கான உரிமைகளையும் விருப்பத்தையும் நாங்கள் மதிக்கிறோம். அமெரிக்காவும் இஸ்ரேலும் பிராந்திய அமைதி மற்றும் பாதுகாப்பு அடித்தளங்களை அழித்து வருகின்றன. மேலும், உலகளவில் ஸ்திரமின்மையை அதிகரித்து வருகின்றன.அமெரிக்காவும், இஸ்ரேலும் ஈரானின் அரசியல் அமைப்பு மற்றும் பிராந்திய ஒருமைப்பாட்டை மீறியதுடன், அதன் சமூக அமைப்பை அழிக்கவும் முயற்சிக்கிறது. இத்தகைய நடவடிக்கைகளை உலக நாடுகள் கண்டிக்கவும், நிராகரிக்கவும் வேண்டும். ஏனெனில் இவற்றை ஒருபோதும் பொறுத்துக்கொள்ள முடியாது'' எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.வட கொரியாவின் அணுசக்தி திட்டத்தை அகற்ற அமெரிக்கா பல ஆண்டுகளாக முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. ஆனால் அதனை பொருட்படுத்தாமல் வடகொரியா அணு ஆயுத தயாரிப்பில் தொடர்ந்து முன்னேறி வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

## எல்பிஜி சிலிண்டர் நெருக்கடி | நாடாளுமன்றத்தில் விவாதிக்க வலியுறுத்தி எதிர்க்கட்சிகள் ஆர்ப்பாட்டம்




புதுடெல்லி: நாடு முழுவதும் எல்பிஜி சிலிண்டர் பற்றாக்குறை ஏற்பட்டுள்ள நிலையில் அது குறித்து நாடாளுமன்றத்தில் விவாதிக்க வலியுறுத்தி மக்களவையில் எதிர்க்கட்சிகள் அமளியில் ஈடுபட்டன. இதனால், அவை சிறிது நேரம் ஒத்திவைக்கப்பட்டது. இதையடுத்து, நாடாளுமன்ற வளாகத்தில் எதிர்க்கட்சி எம்பிக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். காங்கிரஸ் மூத்த தலைவர் பிரியங்கா காந்தி உள்ளிட்ட எம்பிக்கள் இதில் கலந்து கொண்டு கோரிக்கைகளை வலியுறுத்தி கோஷங்களை எழுப்பினர்.இது தொடர்பாக செய்தியாளர்களிடம் பேசிய காங்கிரஸ் எம்பி கே.சி. வேணுகோபால், "வணிக பயன்பாட்டுக்கு எல்பிஜி சிலிண்டர்களை வழங்க வேண்டாம் என்று எரிவாயு நிறுவனங்களுக்கு அறிவுறுத்தல் அனுப்பப்பட்டுள்ளதாக தகவல் வந்துள்ளது. நிலைமை நாள்தோறும் மோசமாகிறது. மத்திய அரசு நாட்டு மக்களிடம் பொய்களைக் கூறி வருகிறது" என குற்றம் சாட்டினார்.மற்றொரு காங்கிரஸ் எம்.பி. கே. சுரேஷ், "நாட்டில் CNG நெருக்கடி மிகவும் தீவிரமாக உள்ளது. உண்மையான நிலையை அரசு வெளிப்படுத்தவில்லை. பல ஹோட்டல்கள் மற்றும் தொழில்கள் மூடப்பட்டுள்ளன. நிலைமை மிகவும் மோசமாக இருந்தாலும், கவலைப்பட வேண்டியதில்லை என்று அரசு கூறுகிறது. ஆனால் ஹோட்டல் மற்றும் உணவக உரிமையாளர்கள் நிலைமை தீவிரமாக இருப்பதாகக் கூறுகின்றனர். அரசு மக்களை தவறாக வழிநடத்துகிறது" என குறிப்பிட்டார்.உத்தவ் தாக்கரே தலைமையிலான சிவசேனா (UBT) எம்.பி. பிரியங்கா சதுர்வேதி, "ஈரானுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப் போவதாக அமெரிக்கா தொடர்ந்து கூறி வந்தது. போர் தொடங்குவதற்கு இரண்டு நாட்களுக்கு முன்பு நமது பிரதமர் இஸ்ரேலுக்கு சென்றார். போர் முதலில் இஸ்ரேல் தரப்பிலிருந்து தொடங்கியது, அமெரிக்கா அதை ஆதரித்தது.நாடாளுமன்ற கூட்டத்தொடரின் போது பெட்ரோலிய அமைச்சர் பதிலளித்தபோது, 'நமக்கு 72 நாட்களுக்கு போதுமான எண்ணெய் கையிருப்பு இருக்கிறது. LPG கையிருப்பும் உள்ளது, LNG பற்றாக்குறையும் இல்லை. எந்த சூழ்நிலையையும் எதிர்கொள்ள தயாராக உள்ளோம்' என்றார். ஆனால் விலை குறைந்திருந்தபோது பொதுமக்களுக்கு எந்த பயனும் கிடைக்கவில்லை; எண்ணெய் நிறுவனங்கள் லாபம் பெற்றன. விலை உயர்ந்தவுடன் சிலிண்டர் விலையும் உயர்த்தப்பட்டது. இன்று எரிவாயு சார்ந்த தொழில்கள் பாதிக்கப்பட்டுள்ளன. புனேயில் ஒரு சுடுகாடு கூட மூடப்பட்டுள்ளது. இதற்காக அரசு என்ன தயாரிப்புகளை செய்தது?" என கேள்வி எழுப்பினார்.திரிணமூல் காங்கிரஸ் எம்.பி. சவுகத் ராய் கூறுகையில், "எல்பிஜி விலை உயர்ந்துள்ளது; விமான கட்டணங்களும் அதிகரித்து வருகின்றன.

# எரிசக்தி துறை மேம்பாட்டு பணிகளுக்காக தமிழக அரசு - கலிபோர்னியா பல்கலை. ஒப்பந்தம்




சென்னை: தமிழக மின்சாரத் துறை வளர்ச்சி மற்றும் பசுமை எரிசக்தி பயன்பாட்டை வலுப்படுத்தும் நோக்கில் அமெரிக்காவின் பெர்க்லியில் உள்ள புகழ்பெற்ற கலிபோர்னியா பல்கலைக்கழகத்துடன் தமிழக அரசு ஒப்பந்தம் செய்துள்ளது. சென்னை தலைமைச் செயலகத்தில் நேற்று நடைபெற்ற நிகழ்ச்சியில், முதல்வர் ஸ்டாலின் முன்னிலையில், தமிழக அரசின் எரிசக்தித் துறை செயலர் மங்கத் ராம் சர்மாவும், கலிபோர்னியா பல்கலைக்கழகத்தின் துணைத் தலைவரும் (கல்வி திட்டமிடல்) புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர். இந்நிகழ்ச்சியில், தலைமைச் செயலர் நா.முருகானந்தம், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத் தலைவர் மற்றும் மேலாண் இயக்குநர் ஜெ.ராதாகிருஷ்ணன், இணை மேலாண் இயக்குநர் (நிதி) விஷு மஹாஜன், தமிழ்நாடு பசுமை எரிசக்தி கழக மேலாண் இயக்குநர் எஸ்.அனீஷ் சேகர், தமிழ்நாடுமின் உற்பத்தி கழக மேலாண் இயக்குநர் ம.கோவிந்த ராவ் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.ஜப்பான் நாட்டைச் சேர்ந்த ஹிரோசே நிறுவனம், ரூ.100 கோடி முதலீட்டில் 100 பேருக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில், திருவள்ளூர் மாவட்டத்தில் மின்சார, மின்னணு இணைப்பிகள் உற்பத்தித் திட்டம் அமைப்பதற்கும் முதல்வர் முன்னிலையில் ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது. காஞ்சிபுரம் மாவட்டம் சிப்காட் பிள்ளைபாக்கம் தொழிற்பூங்காவில் ரூ.500 கோடி முதலீட்டில் 200 பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும் வகையில் அசோக் லேலண்ட் நிறுவனம் மின்கலன் தொகுப்பு உற்பத்தி ஆலை அமைக்க உள்ளது. தலைமைச் செயலகத்தில் நேற்று நடைபெற்ற நிகழ்ச்சியில் இந்த புதிய ஆலை அமைப்பதற்கு காணொலி காட்சி வாயிலாக முதல்வர் ஸ்டாலின் அடிக்கல் நாட்டினார்.மேலும், ரூ.119.06 கோடி மதிப்பீட்டில் 1,800 பேருக்கு வேலைவாய்ப்புகளை உருவாக்கும் வகையில் கரூர், புதுக்கோட்டை, நாகப்பட்டினம் மாவட்டங்களில் 3 புதிய டைடல் நியோ பூங்காக்கள் அமைப்பதற்கும் முதல்வர் அடிக்கல் நாட்டினார்.

## தாராபுரம்:வீட்டு மனை பட்டா கோரி வட்டாட்சியர் அலுவலகத்தில் பொதுமக்கள் ஆர்ப்பாட்டம் 20 குடும்பங்களுக்கு இலவச பட்டா வழங்க நடவடிக்கை எடுக்க வலியுறுத்தல்.



திருப்பூர் மாவட்டம், தாராபுரம் அருகே நந்தவனம்பாளையம் கிராமத்திற்கு உட்பட்ட வெறுவேடம்பாளையம் பகுதி மக்களுக்கு இலவச வீட்டு மனை பட்டா வழங்க வேண்டும் என்று கோரி பொதுமக்கள் வட்டாட்சியர் அலுவலகத்தில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். தாராபுரம் தாலுக்காவிற்கு உட்பட்ட நந்தவனம்பாளையம் மற்றும் காசிலிங்கம்பாளையம் கிராம எல்லைக்குள் உள்ள வெறுவேடம்பாளையம் பகுதியில் தாழ்த்தப்பட்ட அருந்ததியர் சமூகத்தை சேர்ந்த 100-க்கும் மேற்பட்ட குடும்பங்கள் வசித்து வருகின்றனர். இதில் 20-க்கும் மேற்பட்ட குடும்பங்களுக்கு சொந்த வீடு இல்லாததால் கூட்டுக் குடும்பமாகவும், சிலர் வாடகை வீடுகளிலும் தங்கி வருவதாக கூறப்படுகிறது. இவர்களுக்கு இலவச வீட்டு மனை பட்டா வழங்க வேண்டும் என்று பல முறை மாவட்ட ஆட்சியரிடம் மனுக்கள் அளித்தும் இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என பொதுமக்கள் குற்றம்சாட்டினர். இதனை தொடர்ந்து 20-க்கும் மேற்பட்டோர் தாராபுரம் வட்டாட்சியர் அலுவலகத்திற்கு வந்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.இதையடுத்து வட்டாட்சியர் ராமலிங்கம் பொதுமக்களை நேரில் அழைத்து பேச்சுவார்த்தை நடத்தினார். அப்போது பொதுமக்கள் அளித்த மனுவில், "நந்தவனம்பாளையம் கிராமம் சர்வே எண் 404/1-ல் உள்ள பூமிதான நிலத்தில் வீடு இல்லாத 20 குடும்பங்களுக்கு இலவச வீட்டு மனை பட்டா வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்" என்று கோரிக்கை விடுத்துள்ளனர்.மேலும் அந்த பகுதியை சேர்ந்த பெரும்பாலானவர்கள் அருகிலுள்ள விவசாய நிலங்களில் கூலி தொழிலாளர்களாக வேலை செய்து வருகின்றனர். தினமும் ரூ.300 முதல் ரூ.400 வரை கூலி பெற்று வருகின்றனர்.1, மாதத்தில் வேலை கிடைக்கும் நாட்களை பொருத்தவரை ரூ.6,000 முதல் ரூ.7,000 வரை மட்டுமே வருமானம் கிடைக்கிறது. இந்த குறைந்த வருமானத்தில் வாடகை வீட்டில் வசிப்பது மிகவும் சிரமமாக உள்ளது என அவர்கள் தெரிவித்தனர்.மேலும் வீட்டு உரிமையாளர்கள் விதிக்கும் பல்வேறு கட்டுப்பாடுகள் காரணமாக மனஉளைச்சலுக்கு ஆளாகி வருவதாகவும் பொதுமக்கள் தெரிவித்தனர். இதனால் தங்களுக்கு இலவச வீட்டு மனை பட்டா வழங்கப்பட்டால் அந்த இடத்தில் குடிசை அமைத்து தங்களது வாழ்வாதாரத்தை மேம்படுத்திக் கொள்ள முடியும் எனவும் அவர்கள் கோரிக்கை வைத்தனர். மேலும்இந்த மனுவை பெற்றுக்கொண்ட வட்டாட்சியர் ராமலிங்கம், சம்பந்தப்பட்ட துறைகளுடன் ஆலோசித்து விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும் என உறுதி அளித்தார். இதனை தொடர்ந்து வட்டாட்சியர் அலுவலகத்தில் நடைபெற இருந்த ஆர்ப்பாட்டத்தை பொதுமக்கள் தற்காலிகமாக கைவிட்டு அமைதியாக கலைந்து சென்றனர்.இலவச வீட்டு மனை பட்டா கேட்டு வட்டாச்சியர் அலுவலகத்தில் கிராம மக்கள் முற்றுகையிட்டு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதால் தாராபுரம் வட்டாட்சியர் அலுவலகத்தில் சிறிது நேரம் பரபரப்பு ஏற்பட்டது. பேட்டி:திரு,காளிமுத்து.

## மக்களே உஷார்..! இனி சிலிண்டரை பதுக்கினால் சிறை தான்..!



எஸ்மா' எனப்படும் அத்தியவாசிய பொருள் சட்டத்தில் சமையல் காஸ் சிலிண்டர் வந்ததால், இனி சமையல் காஸ் சிலிண்டர்களை முறைகேடாக விற்றாலோ, பதுக்கலில் ஈடுபட்டாலோ, சம்பந்தப்பட்ட நபர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும். ஏழாண்டு வரை சிறை தண்டனை வழங்கப்படும். எஸ்மா- (Essential Services Maintenance Act) என்பது அவசிய பொருட்கள் பராமரிப்புச் சட்டம் ஆகும். இந்த சட்டத்தின் கீழ் வணிகர்கள் அல்லது தனி நபர்கள் சிலிண்டர்களை பதிக்கினால் அவர்கள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்கும் வகையில் சட்டம் கொண்டுவரப்பட்டுள்ளது. இதன்படி சமையல் எரிவாயு சிலிண்டர்களை பதுக்கினாலோ அல்லது கள்ளச் சந்தையில் விற்பனை செய்தாலோ 7 ஆண்டுகள் வரை சிறை தண்டனை அனுபவிக்க நேரிடும். எரிவாயு விநியோகம் செய்வதில் ஏற்பட்டுள்ள நெருக்கடியை கட்டுப்படுத்தவும், சாமானிய மக்களுக்கு தடையில்லாமல் எரிவாயு சிலிண்டர் கிடைப்பதை உறுதி செய்வதும் இந்த சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. இந்த சட்டத்தை மீறுபவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும்.

## உலக மகளிர் தின விழா சிறப்பாக நடைபெற்றது



மார்ச் 8 உலக மகளிர் தினத்தை முன்னிட்டு சென்னை ஜார்ஜ் டவுனில் மரியாளையா தொண்டு நிறுவனத்தின் தலைமையில் சிறப்பான மகளிர் தின விழா நடைபெற்றது. "கொடுத்துப் பெறுவோம்" என்ற தலைப்பில் இந்த விழா சிறப்பிக்கப்பட்டது.

இந்த நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினர்கள் கலந்து கொண்டு மகளிர் அனைவருக்கும் உலக மகளிர் தின வாழ்த்துகளை தெரிவித்து, பெண்களின் சமூக முன்னேற்றம், கல்வி மற்றும் தன்னம்பிக்கை குறித்து தங்கள் கருத்துகளை பகிர்ந்து கொண்டனர்.

இந்த விழாவில் சுமார் 1200 மகளிர் குழு பெண்கள் கலந்து கொண்டு நிகழ்ச்சியை சிறப்பித்தனர். மேலும் மார்ச் 8 மகளிர் தினத்தை முன்னிட்டு தூய்மை பணியாளர்கள் முதல் அரசுத் துறையில் பணியாற்றும் அனைத்து மகளிரையும் நேரில் சந்தித்து அவர்களுக்கு கிரீடம் அணிவித்து மற்றும் பாராட்டு பட்டயம் வழங்கி கௌரவிக்கப்பட்டது.

பெண்களின் உழைப்பையும் சமூகத்தில் அவர்கள் வகிக்கும் முக்கிய பங்களிப்பையும் பாராட்டும் வகையில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சி அனைவராலும் பாராட்டப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

நீங்கள் விரும்பினால் இதை நியூஸ் பேப்பர் ஸ்டைலில் தலைப்பு + துணைத் தலைப்பு + புகைப்பட கேப்ஷன் உடன் முழுமையாக தயார் செய்து தரவும் முடியும்.

# புதிய ரக குளிர்விப்பு சாதனங்கள் அறிமுகத்துடன் வளர்ச்சியை நோக்கி புளூ ஸ்டார் நிறுவனம்!




சென்னை மார்ச் .12

புளூ ஸ்டார் லிமிடெட் நிறுவனம், 2026 கோடை காலத்திற்கான தனது, புதிய ரக அறை ஏசிகளை அறிமுகப்படுத்துவதாக அறிவித்தது. இது இந்தியாவின் குடியிருப்பு மற்றும் வணிக ரீதியான குளிர்விப்பு சந்தையில் நிறுவனத்தின் இருப்பை மேலும் வலுப்படுத்துகிறது. இந்த விரிவான தயாரிப்பு வரிசையில், வாடிக்கையாளர்களின் பல்வேறு தேவைகள் மற்றும் பயன்பாட்டுச் சூழல்களைப் பூர்த்தி செய்யும் வகையில், முதன்மை பிரீமியம் ரகங்கள் உட்பட 125 மாடல்கள் இடம்பெற்றுள்ளன. அனைத்து மாடல்களும் ஜனவரி 1, 2026 முதல் அமலுக்கு வந்த புதிய எரிசக்தி திறன் பணியகத்தின் தரநிலைகளுக்கு இணங்க வடிவமைக்கப்பட்டுள்ளன. ஆற்றல் திறன் கொண்ட மற்றும் உயர் செயல்திறன் கொண்ட குளிர்விப்பு தீர்வுகளுக்கான அதிகரித்து வரும் தேவையை ஈடுகட்டும் வகையில் இந்த தயாரிப்புகள் வணிக ரீதியாக உருவாக்கப்பட்டுள்ளன.

இந்தியாவின் வீடுகளுக்கான ஏசி துறை, அதிகரித்து வரும் வருமானம், விரைவான நகரமயமாக்கல் மற்றும் தட்பவெப்ப நிலையின் தீவிரம் ஆகியவற்றால் நிலையான வளர்ச்சியை சந்தித்து வருகிறது. 2030 நிதியாண்டிற்குள் இந்தத் துறை சுமார் 14 மில்லியன் யூனிட்டுகளில் இருந்து 30 மில்லியன் யூனிட்டுகளாக விரிவடையும் என்று கணிக்கப்பட்டுள்ளது. குறிப்பாக, குறைந்த ஊடுருவல் கொண்ட சந்தைகளில் முதல் முறை வாங்குபவர்கள் மற்றும் முதிர்ச்சியடைந்த நகர்ப்புற மையங்களில் பழைய ஏசிகளை மாற்றுபவர்களால் இந்தத் தேவை அதிகரித்துள்ளது. டயர் 3, 4 மற்றும் 5 நகரங்கள் முக்கிய வளர்ச்சி இயந்திரங்களாக உருவெடுத்து, டயர் 1 மற்றும் 2 நகரங்களை விட வேகமாக வளர்ந்து வருகின்றன.இந்த விரிவான தயாரிப்பு வரிசையில் இன்வெர்ட்டர், பிக்ஸட் ஸ்பீடு மற்றும் விண்டோ ஏசிகள் என பல்வேறுவிலைப்புள்ளிகளில் அனைத்து தரப்பு வாடிக்கையாளர்களுக்கும் ஏற்றவாறு மாடல்கள் உள்ளன. இதில் 'ஐகோனியா' என்ற பிரீமியம் ரக ஏசி, நேர்த்தியான 'மிட்நைட் சில்வர்' நிறத்தில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. எதிர்காலத்திட்டங்கள் குறித்து சென்னையில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் புளூ ஸ்டார் லிமிடெட் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர்B. தியாகராஜன், "இந்தியாவின் குளிர்விப்பு சாதனங்களுக்கானதேவை ஒரு முக்கிய கட்டத்தை எட்டியுள்ளது. எதிர்காலத்தில் இந்தியாவில் சுமார் 150 மில்லியன் குடும்பங்கள் ஏசி வாங்கும் வசதியைப் பெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. எங்களின் புதிய ரக தயாரிப்புகள், குடியிருப்பு மற்றும் வணிகத் துறைகளில் வளர்ந்து வரும் வாய்ப்புகளைப் பயன்படுத்திக் கொள்ள உதவும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளன. மாறிவரும் வாடிக்கையாளர் தேவைகளுக்கு ஏற்ப எங்களின்தயாரிப்பு உத்திகளை அமைப்பதன் மூலம், அடுத்தகட்ட குளிர்விப்புத் தேவையில் முன்னிலை வகிக்க புளூ ஸ்டார் தயாராக உள்ளது," என்று தெரிவித்தார்.



திருவள்ளூர் அடுத்துள்ள சதுரங்க பேட்டையில் தமிழக முன்னாள் முதல்வர் ஜெ. ஜெயலலிதா 78 வது பிறந்தநாள் விழாவையொட்டி நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா கோலாகலமாக நடைபெற்றது. விழாவுக்கு பூண்டி ஒன்றிய செயலாளர் மாதவன் தலைமை தாங்கினார் .அதிமுக தொழில்நுட்ப பிரிவு மாவட்ட பொருளாளர் டில்லி குமார் அனைவரையும் வரவேற்றார். அதிமுக தொழில்நுட்ப பிரிவு மாவட்ட தலைவர் மகேந்திரன், கிளைச் செயலாளர் ஹரி முன்னிலை வகுத்தனர். விழாவில் 250 பெண்களுக்கு இலவச சேலைகளை முன்னாள் அமைச்சரும், திருவள்ளூர் மேற்கு மாவட்ட கழக செயலாளருமான பி. வி ரமணா வழங்கி சிறப்புரையாற்றினார். இந்நிகழ்வில் மாவட்ட துணை செயலாளர் செந்தில்குமார், மாவட்ட அம்மா பேரவை செயலாளர் கே பி எம் எலரசன், இளைஞரணி தலைவர் தேவா, மாவட்ட பொருளாளர் அம்புரோஸ், பட்டரை பெருமந்தூர் கிளை செயலாளர் சத்யா, நிர்வாகிகள் ராஜ்குமார், முரளி, தீனதயாளன், மோகன், மணிகண்டன், ராஜ் சேகர், சுந்தரம், பூபாலன், பிரபாகரன், குணசேகரன், உமா, பிரேமா ,பரமகுரு, மைக்கேல், அப்பு, கஜேந்திரன், பிரகாஷ் உள்ளிட்டோர் பங்கேற்றனர். நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை டில்லி குமார் சிறப்பாக செய்திருந்தார்.

# ஹோட்டல் மட்டும் பாதிக்கப்படவில்லை. சிலிண்டர் கொண்டு வரக்கூடிய வாகனம், அதில் பணியாற்றக்கூடிய டிரைவர், லேபர் பாதிக்கப்படுகிறார்கள்

## விக்ரமராஜா பேட்டி



தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரமைப்பு மதுரை மாவட்ட பொதுக்குழு மற்றும் 43 வது மாநில மாநாடு ஆலோசனைக் கூட்டம் மதுரை மாவட்டம் அவனியாபுரம் பகுதியில் உள்ள தனியார் மஹாலில் நடைபெற்றது.மதுரை மண்டல மாவட்ட தலைவர் செல்லமுத்து தலைமை வகித்தார் மதுரை மாவட்ட செயலாளர் அழகேசன் வரவேற்புரை ஆற்றினார் தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரமைப்பு தேசிய முதன்மை துணைத் தலைவர் அகில இந்திய வணிகர்கள் சம்மேளனம் விக்கிரமராஜா கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். தொடர்ந்து நடைபெற்ற கூட்டத்தில் பொதுக்குழு மற்றும் 43வது மாநில மாநாடு குறித்த ஆலோசனைகள் நடைபெற்றன. இதில் வணிகர்கள் ஏராளமானோர் கலந்து கொண்டனர். மாவட்ட பொருளாளர் லட்சுமி காந்தன் நன்றியுரை கூறினார்.தொடர்ந்து செய்தியாளர்களை சந்தித்து விக்கிரமராஜா கூறியதாவது:

தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரமைப்பின் சார்பாக வருகின்ற 43 வது வணிகர் தின மாநில மாநாடு, விழிப்புணர்வு எழுச்சி மாநாடாக திருவாரூரில் நடைபெற இருக்கிறது. இந்த மாநாட்டில் பங்கேற்பதற்காக மதுரை மாவட்டத்திலிருந்து 5,000 வணிகர்கள் மாநாட்டில் பங்கேற்போம் என்பதை தீர்மானித்திருக்கிறோம்.குறிப்பாக இந்த மாநாட்டில் பல்வேறு பிரகடன தீர்மானங்கள் எடுக்க இருக்கிறோம். அனைத்து மாநிலத்தினுடைய தலைவர்களும் இந்த மாநாட்டில் பங்கேற்கிறார்கள். ஏறக்குறைய இதுவரை 28 மாநிலங்கள் வருவதாக ஒப்புதல் கொடுத்திருக்கிறார்கள். இந்த மாநில மாநாட்டில் சிறப்புமிகு பிரகடன தீர்மானமாக சாமானிய வணிகர்களைப் பாதுகாப்பதற்கு, கார்ப்பரேட் கம்பெனி ஆன்லைன் வர்த்தகத்தின் பிடியிலிருந்து வியாபாரிகளைப் பாதுகாப்பது எப்படி என்பதை ஆய்வு செய்து முறையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற பிரகடன தீர்மானத்தை எடுக்க இருக்கிறோம்.

சிலிண்டர் மற்றும் எரிவாயு தட்டுப்பாடு குறித்த கேள்விக்கு:

சிலிண்டர், கேஸ் இதெல்லாம் கடுமையான தட்டுப்பாடு ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. இன்று மதியம் 3:00 மணி அளவிலே சென்னை தலைமைச் செயலகத்தில் உணவுத்துறை அமைச்சர் மற்றும் அதனுடைய அதிகாரிகளோடு ஒரு கலந்தாய்வுக் கூட்டம் நடைபெற்று முடிந்திருக்கிறது. அந்தக் கூட்டத்தில் இன்னும் ஒரு நான்கு, ஐந்து நாள் தாக்குப்பிடிக்குமாறு சில சிலிண்டர் கம்பெனிகள் சொல்லி இருக்கிறார்கள். அதே வேளையிலே மத்திய அரசுக்கு மாநில அரசு ஒரு ஆய்வுக் கூட்டத்தை நடத்தப்பட்டு, அதில் தீர்வு காணக்கூடிய சூழலை எடுத்திருக்கிறார்கள். அதற்கு தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரமைப்பின் சார்பாக தமிழ்நாடு முதலமைச்சர்க்கு மனமார்ந்த நன்றியை நாங்கள் தெரிவித்துக் கொள்கிறோம். அதேபோன்று, இன்று கிராமப்புற ங்களில் ஹோட்டலில் நிறைய ஹோட்டல்கள் கட்டை அடுப்பு, கறி போடுற அடுப்பு, கட்டை போட்டு ஸ்டீமர் (steamer) இருக்கு. இதெல்லாம் நடைமுறையில் இருப்பதால் தப்பித்துக் கொண்டிருக்கிறார்கள்.

ஆனால் பெருநகரங்கள் சென்னை, கோவை, திருச்சி போன்ற பெருநகரங்களில் அந்த ஸ்டீமரே கேஸை நம்பி இருக்கிறார்கள். அவங்கள எல்லாம் தொழில் நடத்த முடியாத நிலை ஏற்பட்டுவிடும். குறிப்பாக தோசை கிடைக்காது மக்களுக்கு. வேகும் பொருள் ஓரளவுக்கு இட்லி, ரைஸ், சாதங்கள் மட்டும் கிடைக்கக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. ஆனால் இதில் ஹோட்டல் மட்டும் பாதிக்கப்படலை. அந்த கேஸ் சிலிண்டர் கொண்டு வரக்கூடிய வாகனம் ஓட்ட முடியாது. அதில் பணியாற்றக்கூடிய டிரைவர், லேபருக்கு (labour) ஓட்ட முடியாது. ஒரு செயின் (chain) சங்கிலி மாதிரி பல ஆயிரக்கணக்கான மக்கள் இதில் பாதிக்கப்படுவார்கள். இப்பதான் கேஸ் இவ்வளவு அத்தியாவசியமான பொருளாக இருப்பது தெரிகிறது என்பது இப்பதான் ஆய்வு செய்ததில் தெரியப்படுகிறது. நிறைய ஃபேக்டரிகள் (factories), உற்பத்தி செய்யக்கூடிய ஃபேக்டரிகள்தடைபடுகிறது. மருத்துவமனைக்கு கட்டாயமாக கேஸ் தேவைப்படுகிறது. பல சூழலில் தவித்துக் கொண்டிருக்கிறோம். உலக நாடுகள்எல்லாம்எப்படி இந்தப்போர் முடியுமா என்று சிந்தனை எழுந்து கொண்டிருக்கிறது. போர்ச் சூழலில் இருந்து விடுவித்து நம்மைக் காப்பாற்றுவதற்கு இறைவன்தான் அருள் புரிய வேண்டும் என்பதை தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரமைப்பு கேட்டுக் கொள்கிறது.

**மதுரை விமான நிலையம் குறித்த கேள்விக்கு:**

மதுரை விமான நிலையத்தை சர்வதேச அந்தஸ்து கொண்டு வந்திருக்கிறார்கள். அடுத்த கட்டமா எக்ஸ்போர்ட் (export) எல்லாம் அதிக அளவுல நடக்கும்னு சொல்றாங்க அதாவது விமான நிலையம் சர்வதேச அளவிலே மதுரை அமல்படுத்தியதற்கு மத்திய அரசுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம். அதே வேளையில் இங்கு செயல்படுத்தக்கூடிய ஏரோட்ரோம் (aerodrome) என்பது இன்னைக்கு சாதாரணமான மக்கள் பிளைட் (flight) ஏறக்கூடிய சூழலை உருவாக்கி இருக்கிறார்கள். ஆனால் கட்டணம் என்பது குதிரைக் கொம்பாக இருக்கிறது. மதுரை, தூத்துக்குடி விமான நிலையம் எடுத்துக் கொண்டால் இந்தியாவிலேயே அதிக கட்டணம் வசூலிக்கக்கூடிய மாவட்டம் முதலில் தூத்துக்குடி, அதன்பிறகு மதுரை. இந்தச் சூழல் இருக்கிறது. 'ஒன் மேன் ஷோ' (one man show) ஆக ஒரு கம்பெனி இருக்கின்ற காரணத்தினால் அந்த நிலை இருக்கிறது மத்திய அரசு அதை ஆய்வு செய்து மேலும் சில கம்பெனி விமானங்களை அனுப்ப வேண்டும்.

அதே மாதிரி இரவு நேர பிளைட் தூத்துக்குடியில் 21ல் இருந்து இரவு 8:00 மணி வரை சொல்லியிருக்காங்க. அது 9:30 மணி அல்லது 9:00 மணிக்கு இருந்தால் மிக சௌகரியமாக இருக்கும். ஏனென்றால் நிகழ்ச்சியும் நிறைவு செய்த பிறகு அவர் சென்னைக்கு போக வசதியாக இருக்கும்.

இதை ஏதுவாக அமைத்திட வேண்டும். நவீன முறையிலே அரசு செயல்படுகின்ற பொழுது அதைப் பாதுகாப்பதோடு, முறைப்படுத்தி எப்பொழுதுமே மக்களுக்கு பயனுள்ளதாக அமைய வேண்டும் என்பதை தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரமைப்பு கேட்டுக் கொள்கிறது என கூறினார்.

### அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா மற்றும் கழக நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதற்காக

# கிருஷ்ணகிரி வருகை தரும் துணை முதலமைச்சருக்கு கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட திமுக சார்பாக பிரம்மாண்ட வரவேற்பு



திமுகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் முதலமைச்சரின் ஆணைக்கிணங்க, கழக இளைஞர் அணி செயலாளர், தமிழ்நாடுதுணைமுதலமைச்சர் வருகிற 13ஆம் தேதி தேதி வெள்ளிக்கிழமை மதியம் கிருஷ்ணகிரி மாவட்டத்திற்கு வருகை தந்து காவேரிப்பட்டினம் ஒன்றியம், பையூர் கிராமத்தில் திமுக கொடி ஏற்றி வைத்து, கிருஷ்ணகிரி சுங்கச்சாவடி அருகே அமைக்கப்பட்டுள்ள கலைஞர் அரங்கம் பிரம்மாண்ட மேடையில் அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில் கலந்து கொள்ள உள்ளார். இதனைத் தொடர்ந்து துணை முதலமைச்சர் கிருஷ்ணகிரி தனியார் திருமண மண்டபத்தில் கிருஷ்ணகிரி கிழக்கு, மேற்கு மாவட்ட திராவிட முன்னேற்ற கழக மாவட்ட சார்பு அணிகளின் நிர்வாகிகளுடனான சந்திப்பு கூட்டம் நடைபெற உள்ளது.

துணை முதலமைச்சர் 13 ஆம் தேதி வெள்ளிக்கிழமை இரவு கிருஷ்ணகிரியில் தங்குகிறார். 14 ஆம் தேதி காலை 0900 மணிக்கு கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டம், பர்கூர்சட்டமன்ற தொகுதி ஒப்பதவாடி கிராமத்தில் திராவிட முன்னேற்ற கழக கொடியை ஏற்றி வைக்க உள்ளார். இதனைத் தொடர்ந்து திருப்பத்தூர் மாவட்டத்திற்கு சென்று அங்கு நடைபெற உள்ள நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ள உள்ளார்.

கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டத்தைச் சேர்ந்த மூத்த நிர்வாகிகள், முன்னாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், மாநில, மாவட்ட நிர்வாகிகள், ஒன்றிய,நகர, பேரூர் கழக செயலர்கள், பொறுப்பாளர்கள், அனைத்து அணிகளின் தலைவர்கள், துணைத் தலைவர்கள், மாவட்ட, நகர, ஒன்றிய, பேரூர் கழக அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் உள்ளிட்ட நிர்வாகிகள், வார்டு, வட்ட, கிளை கழக செயலாளர்கள், நிர்வாகிகள், BLA 2, BLC, BDA, வாக்குச்சாவடிமுகவர்கள், வாக்குச்சாவடி ஒருங்கிணைப்பாளர்கள், கழகத் தோழர்கள் அனைவரும் திரளாக கலந்து கொண்டு 13ஆம் தேதி மதியம் சரியாக 0300 மணிக்கு கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட எல்லையான பையூரில் கழக இளைஞரணி செயலாளரும், தமிழ்நாடு துணை முதலமைச்சருமான உதயநிதிக்கு பிரம்மாண்ட வரவேற்பு அளித்து, அனைத்து நிகழ்ச்சிகளிலும் கலந்து கொண்டு சிறப்பிக்க வேண்டும் என தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

# தஞ்சையில் சுகாதார ஆய்வாளர் சங்கங்களின் கூட்டமைப்பு சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம்



தஞ்சாவூர், மார்ச்.12

தஞ்சை காந்திஜி சாலையில் உள்ள மாவட்ட சுகாதார அலுவலகம் எதிரில் தமிழ்நாடு சுகாதார ஆய்வாளர் சங்கங்களின் கூட்டமைப்பு சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் நேற்று மாலை நடந்தது. ஆர்ப்பாட்டத்திற்கு கூட்டமைப்பு மாவட்ட ஒருங்கிணைப்பாளர்சரண் ராஜ் தலைமை தாங்கினார். நலக் கல்வியாளர் செல்வம் வரவேற்றார். பொது சுகாதார தன் துறை அலுவலர்கள் சங்க மாநில செயலாளர் எம்.இளங்கோவன் கோரிக்கை விளக்க உரை ஆற்றினார். தமிழ்நாடு சுகாதார ஆய்வாளர்கள் சங்க மாவட்ட இணைச்செயலாளர் சதீஸ் தமிழ்நாடு அரசு பொது சுகாதார துறை சுகாதார ஆய்வாளர்கள் நலச் சங்க மாநில தலைவர் ராஜா தமிழ்நாடு சுகாதார ஆய்வாளர்கள் சங்க முன்னாள் மாநில பொதுச்செயலாளர் ராஜசேகர் தமிழ்நாடு சுகாதார ஆய்வாளர்கள் சங்க மாநில நிர்வாகக்குழு உறுப்பினர் அன்பரசன் மாவட்ட துணைத் தலைவர் அற்புதராஜ் துப்புரவு ஆய்வாளர் மற்றும் சுகாதார ஆய்வாளர் நலச் சங்க மாநில செயலாளர் பிரிவின் குமார் ஆகியோர் கண்டன உரை ஆற்றினர். தமிழ்நாடு அரசு அனைத்து சுகாதார செவிலியர்கள் சங்க மாவட்ட செயலாளர் சீதாலட்சுமி தமிழ்நாடு அரசு அனைத்து மருந்தாளுநர்கள் சங்க மாவட்ட தலைவர் அண்ணாதுரை தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க மாவட்ட தலைவர் பாலாஜி தமிழ்நாடு சுகாதார போக்குவரத்து துறை ஓய்வு பெற்றோர் நலச் சங்க மாநில பொதுச்செயலாளர் குமாரவேலு ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். தமிழ்நாடு சுகாதார ஆய்வாளர் சங்கங்களின் கூட்டமைப்பு நிதி காப்பாளர் சுரேஷ்குமார் நிறைவுரை ஆற்றினார். முடிவில் தமிழ்நாடு சுகாதார ஆய்வாளர் சங்க மாவட்ட பொருளாளர் பாலமுருகன் நன்றி கூறினார். சுகாதார ஆய்வாளர்கள் பதவி உயர்வு கோரிக்கை தொடர்பான பேச்சுவார்த்தையில் ஏற்றுக் கொண்ட முடிவுகளை செயல்படுத்த மறுப்பது, தொழுநோய் ஒழிப்பு திட்ட பணியிடங்களான என் எம்எஸ் மற்றும் டிஎச்இ பணியிடங்களை இல்லாமல் செய்யும் உள்நோக்கத்தோடு செயல்படுவது, சுகாதார ஆய்வாளர் நிலை2 புதிய பணி நியமனத்தில் உரிய அக்கறை செலுத்தாதது, என்.எச்.எம். ஒப்பந்த பணியாளர்களுக்கான ஊதிய உயர்வு அறிவிப்பில் ஒப்பந்த சுகாதார ஆய்வாளர்கள் விடுபட்டு இருப்பது உள்ளிட்ட சுகாதார ஆய்வாளர்கள் பணியமைப்புக்கு எதிராகவும் அலட்சிய போக்குடன் செயல்படும் பொது சுகாதார இயக்குனர் கத்தை கண்டித்தும் இந்த ஆர்ப்பாட்டம் நடந்தது.




கும்மிடிப்பூண்டி,ஊத்துக்கோட்டை அருகே பூண்டி ஒன்றியத்திற்கு உட்பட்ட கச்சூரில் ரூபாய் 10 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட புதிய பயணியர் பேருந்து நிழற்குடையை கும்மிடிப்பூண்டி எம்எல்ஏ டி.ஜெ.கோவிந்தராஜன் ரிப்பன் வெட்டி திறந்து வைத்தார். திருவள்ளூர் மாவட்டம், பூண்டி ஒன்றியம்,கச்சூர் ஊராட்சியில் 202324 ஆண்டு திட்டத்தின்படி கும்மிடிப்பூண்டி சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியிலிருந்து ரூ.10லட்சம் மதிப்பீட்டில் பயணியர் பேருந்து நிழற்குடை கட்டிடம் கட்டுவதற்கான நிதி ஒதுக்கப்பட்டு அதற்கான பணிகள் நடைபெற்று வந்த நிலையில் கட்டுமான பணிகள் நிறைவடைந்ததை தொடர்ந்து அதற்கான திறப்பு விழா நடைபெற்றது. இதில் சிறப்பு அழைப்பாளராக கும்மிடிப்பூண்டி சட்டமன்ற உறுப்பினரும்,திமுக தலைமை செயற்குழு உறுப்பினருமான டி.ஜெ. கோவிந்தராஜன் கலந்துகொண்டு புதிதாக கட்டி முடிக்கப்பட்ட பயணியர் பேருந்து நியற்குடையை ரிப்பன் வெட்டி திறந்து வைத்து மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வந்தார். இந்நிகழ்ச்சியில் அவைத் தலைவர் சக்கரவர்த்தி, மாவட்ட பிரதிநிதி வெங்கடாதிரி,இளைஞர் அணி துணை அமைப்பாளர் தில்லை குமார்,ஒன்றிய துணைச் செயலாளர்கள் சித்ராபாபு,பாபு, ஸ்ரீராம், விஜயன், ஹரிஹரன்,மேவன், காண்டீபன், சாந்தகுமார்,எட்வர்ட் துரை, ரன்ஜித், டார்த்தி, நளாயினி உள்ளிட்ட நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்.




தென்காசி மாவட்டம் செங்கோட்டையில் தமிழர் முன்னேற்றப் பேரவை மாநில பொருளாளர் சுபாஷ் சந்திரபோஸ் இல்ல மணவிழாவில் தமிழர் முன்னேற்றப் பேரவை தலைவர் சிவச்சந்திரன் , பொதுச்செயலாளர் பேரளம் ரா.பாலு , மாநில கொள்கை பரப்பு துணைச் செயலாளர் பாலை மதியழகன், மாநில தகவல் தொழில்நுட்ப அணி தலைவர் பார்த்திபன் கணேசன், செங்கல்பட்டு மாவட்ட தலைவர் ரவி ராஜன், தஞ்சாவூர் கிழக்கு மாவட்ட செயலாளர் ராமதாஸ் ,மயிலாடுதுறை மாவட்ட செயலாளர் மெல்கியோன்,நன்னிலம் ஒன்றிய துணை செயலாளர் சிவக்குமார், சீர்காழி ஒன்றிய துணை செயலாளர் ரமேஷ் உள்ளிட்டோர் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினர்.

திருவண்ணாமலை மாவட்டத்தில்

# புதுப்பாளையத்தில் புதியதாக கட்டப்பட்ட ஊராட்சி ஒன்றிய அலுவலக கட்டிடம்

## சட்டப்பேரவை துணைத் தலைவர் திறந்து வைத்தார்



திருவண்ணாமலை, மார்ச். 12–

தமிழ்நாடு முதலமைச்சர் திருவண்ணாமலை மாவட்டத்தில் புதுப்பாளையம், தெள்ளார், செய்யார் ஆகிய இடங்களில் புதியதாக கட்டப்பட்ட ஊராட்சி ஒன்றிய அலுவலகங்களை திறந்து வைத்தார்.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்(10.03.2026) அன்று சென்னை தலைமைச் செயலகத்திலிருந்து காணொளிக்காட்சி வாயிலாக ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை சார்பாக திருவண்ணாமலை மாவட்டத்தில் புதுப்பாளையம், தெள்ளார், செய்யார் ஆகிய இடங்களில் புதியதாக கட்டப்பட்ட ஊராட்சி ஒன்றிய அலுவலகங்களை திறந்து வைத்தார்.

அதனை தொடர்ந்து தமிழ்நாடு சட்டப்பேரவை துணைத்தலைவர் கு.பிச்சாண்டி புதுப்பாளையம் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் குத்து விளக்கேற்றி பயன்பாட்டிற்கு கொண்டு வந்தார். இந்நிகழ்ச்சியில் கலசபாக்கம் சட்டமன்ற உறுப்பினர் பெ.சு.தி. சரவணன், மாவட்ட வருவாய் அலுவலர் இரா.இராம் பிரதீபன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இந்நிகழ்ச்சியில் தமிழ்நாடு சட்டப்பேரவை துணைத்தலைவர் கலந்து கொண்டு பேசுகையில், தமிழ்நாடு முதலமைச்சர் தலைமையிலான அரசு எண்ணற்ற திட்டங்க ளையும் பல்வேறு வளர்ச்சி திட்டப்பணிகளை செயல்படுத்தி வருகிறது.

அதன்படி திருவண்ணாமலை மாவட்டத்தில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை சார்பாக புதுப்பாளையத்தில் ரூ.5 கோடியே 90 இலட்சம் மதிப்பீட்டில் புதியதாக கட்டப்பட்ட ஊராட்சி ஒன்றிய அலுவலக கட்டிடத்தையும், தெள்ளார் ஊராட்சியில் ரூ.5 கோடியே 36 இலட்சம் மதிப்பீட்டில் புதியதாக கட்டப்பட்ட ஊராட்சி ஒன்றிய அலுவலக கட்டிடத்தையும், செய்யார் நகராட்சியில் ரூ.5 கோடியே 90 இலட்சம் மதிப்பீட்டில் புதியதாக கட்டப்பட்ட ஊராட்சி ஒன்றிய அலுவலக கட்டிடத்தையும் தமிழ்நாடு முதலமைச்சரால் திறந்து வைக்கப்பட்டுள்ளது. திருவண்ணாமலை மாவட்டத்தில் சாலைகள் மேம்பாடு, திட்டப்பணிகள். புதிய கட்டிடங்கள் 61601 பல்வேறு வளர்ச்சி திட்டப்பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும் இந்தியாவில் வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத அளவில் குடிநீர்தமிழ்நாட்டில் சிறப்பான வகையில் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு அதன் வாயிலாக பொதுமக்கள், மாணவ, மாணவிகள், விவசாயிகள், இளைஞர்கள், பெண்கள் மற்றும் தொழில் துறையினர் போன்றவர்கள் பயனடைந்துள்ளனர்.

வளர்ச்சிதிட்டப்பணிகளை தொடர்ந்து செயலாறிட தமிழ்நாடு முதலமைச்சருக்கு ஆதரவு அளிக்கவேண்டும் என்று தமிழ்நாடு சட்டப்பேரவை துணைத்தலைவர் தெரிவித்துள்ளார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஊரக வளர்ச்சி திட்ட முகமை இணை இயக்குநர்/ திட்ட இயக்குநர் ஆர்.மணி, உதவி இயக்குநர் (ஊராட்சிகள் மற்றும் தணிக்கை) மணிவாசகம், ஊரக வளர்ச்சித்துறை செயற்பொறியாளர் இளங்கோ மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள்உடனிருந்தனர்.

# சமஸ்கிருதம் பல்கலைக்கழகம் சார்பில் தேசிய சாஸ்திர சங்கமம் தொடங்கியது

## 26 மாநிலத்தைச் சேர்ந்த 600–க்கும் மேற்பட்ட மாணவ மாணவியர்கள் பங்கேற்பு



காஞ்சிபுரம், மார்ச். 12–

டெல்லி மத்திய சமஸ்கிருதப் பல்கலைக்கழகத்தின் சார்பில் நடத்தப்படும் 63 வது அகில பாரதிய சாஸ்திர சங்கமம் (2025–26), காஞ்சிபுரம் ஏனாத்தூரில் உள்ள ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி விஷ்வ மஹாவித்யாலயாவில் மிகச் சிறப்பாகத் தொடங்கியது, மூன்று நாட்கள் நடைபெறவுள்ள இந்த மாபெரும் தேசிய நிகழ்வில் ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஸ்ரீ சங்கர விஜயேந்திர சரஸ்வதி சங்கராச்சாரிய சுவாமி ஆகியோரின் அருளாசியுடனும் தலைமையிலும் தொடங்கி வைத்தனர்,

இவ்விழாவில் மத்திய சமஸ்கிருதப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் ஸ்ரீனிவாச வரகேடி மற்றும் ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி விஷ்வ மஹாவித்யாலயாவின் வேந்தர் வேம்படி குடும்ப சாஸ்திரி, கர்நாடக சமஸ்கிருதப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் எஸ். அகல்யா, ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி விஷ்வ மஹா வித்யாலயாவின் துணை வேந்தர்ஜி.ஸ்ரீநிவாசுமற்றும் ஸ்ரீவெங்கடேஸ்வராவேதப் பல்கலைக்கழகத் துணை வேந்தர் ராணி சதாசிவ மூர்த்தி ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொண்டனர்.

இந்தத் தேசிய அளவிலான சாஸ்திர சங்கமத்தில் இந்தியாவின் 26 மாநிலங்களிலிருந்து 600க்கும் மேற்பட்ட மாணவர்கள் ஆர்வத்துடன் பங்கேற்கின்றனர். பல்வேறு பாரம்பரிய சாஸ்திரப் போட்டிகள் மார்ச் 11 மற்றும் 12 ஆகிய தேதிகளில் நடைபெறவுள்ளன, இதில் மாணவர்கள் தங்கள் அறிவுத்திறனை வெளிப்படுத்த உள்ளனர். இந்த விழாவின் முக்கிய நிகழ்வாக, போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கான பரிசளிப்பு விழா மற்றும் நிறைவு விழா மார்ச் 13 அன்று நடைபெற உள்ளது. சமஸ்கிருத மொழி மற்றும் சாஸ்திரக் கல்வியைப் போற்றும் வகையில் அமைந்துள்ள இந்த நிகழ்வு, இந்திய கலாச்சாரத்தின் பெருமையை இளைய தலைமுறையினரிடம் கொண்டு சேர்ப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.



தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை சார்பில், கோவை அவினாசி பிரதான சாலையில் உள்ள வ.உ.சி. பூங்காவில் 50 இலட்சம் ரூபாய் செலவில் நிறுவப்பட்டுள்ள அறிவியல் மாமேதை ஜி.டி. நாயுடுவின் திருவுருவச் சிலையை காணொலிக் காட்சி வாயிலாக திறந்து வைத்தார். இந்த நிகழ்ச்சியில், துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின், பொதுப் பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை செயலாளர் வே.ராஜாராமன், செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் மரு.இரா. வைத்திநாதன், ஆகியோர் கலந்து கொண்டனர். கோவையிலிருந்து காணொலிக் காட்சி வாயிலாக கோவை மாநகராட்சி மேயர் ரங்கநாயகி ராமச்சந்திரன், துணை மேயர் வெற்றிச்செல்வன், மாநகராட்சி ஆணையர் சிவகுரு பிரபாகரன், மாநகர காவல் ஆணையர் கண்ணன், ஜி.டி. நாயுடுவின் மகன் ஜி.டி. கோபால், அவரது மனைவி சந்திரா, குமரகுரு கல்வி நிறுவனங்களின் தலைவர் பி.கே. கிருஷ்ணராஜ் வானவராயர், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

ரூ.5.79 கோடி மதிப்பிலான

# செஞ்சி ஊராட்சி ஒன்றிய அலுவலக கட்டிடம்

## எம்.எல்.ஏ. குத்துவிளக்கு ஏற்றி திறந்து வைத்தார்





செஞ்சி, மார்ச். 12–

செஞ்சி ஊராட்சி ஒன்றிய அலுவலக புதிய கட்டிடத்தினை தமிழ்நாடு முதலமைச்சர்மு.க.ஸ்டாலின் காணொளி வாயிலாக ரூபாய் 5.79 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்ட கட்டிடத்தினை திறந்து வைத்ததை தொடர்ந்து, விழுப்புரம் வடக்கு மாவட்ட செயலாளர் செஞ்சி சட்டமன்ற உறுப்பினரும் முன்னாள் அமைச்சருமான,செஞ்சி கே.எஸ். மஸ்தான். ரிப்பன் வெட்டி,குத்து விளக்கு ஏற்றி பொது மக்களின் பயன்பாட்டிற்கு திறந்து வைத்து,இனிப்பு வழங்கினார்.

புதிய கட்டிடதினை தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், சென்னை தலைமைச் செயலகத்தில் இருந்து காணொளி காட்சி மூலம் திறந்து வைத்தார். இதனைத் தொடர்ந்து புதிய ஊராட்சி ஒன்றிய அலுவலக கட்டிடத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் விழுப்புரம் மாவட்ட கூடுதல் ஆட்சியர் பத்மஜா தலைமையில், முன்னாள் அமைச்சர்,விழுப்புரம் வடக்கு மாவட்ட செயலாளருமான செஞ்சி கே.எஸ்.மஸ்தான், சட்டமன்ற உறுப்பினர், ஆரணி பாராளுமன்ற உறுப்பினர் எம்.எஸ்.தரணி வேந்தன், செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் வழக்கறிஞர் விஜயகுமார், ஆகியோர் குத்து விளக்கு ஏற்றி வைத்து பொதுமக்களுக்கு இனிப்பு வழங்கினார்கள். நிகழ்ச்சியில் மாவட்ட பொதுக்குழு உறுப்பினர் மணிவண்ணன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் செந்தமிழ் செல்வன், மாவட்ட ஊரக வளர்ச்சி துறை செயற்பொறியாளர் கண்ணன், செஞ்சி ஊராட்சி ஒன்றிய துணைத் தலைவர் ஜெயபால், மேல்மலையனூர் ஒன்றிய செயலாளர் எல்.பி. நெடுஞ்செழியன், செஞ்சி பேரூராட்சி மன்ற தலைவர் மொக்தியார்அலி, மாவட்ட விவசாய அணித் தலைவர் அஞ்சாஞ்சேரி கணேசன், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஆனந்த், மாவட்ட கவுன்சிலர் அரங்க ஏழுமலை, அகிலா பார்த்திபன், வட்டார வளர்ச்சி அலுவலர்கள்; அமுதவல்லி, ராமதாஸ், உதவி செயற்பொறியாளர் முகமது யாசின், உதவி பொறியாளர் நாராயணசாமி, தண்டபாணி, ரஞ்சித், கற்பகம், துணை வட்டார வளர்ச்சி அலுவலர்கள் சுந்தரபாண்டியன், காஞ்சனா, சசிகலா, அபிராமி, உள்ளிட்ட ஒன்றிய கவுன்சிலர்கள் ஊராட்சி மன்ற தலைவர்கள் மாத்தூர் ஊராட்சி மன்ற தலைவர் தேவகடாட்சம், கவறை ஊராட்சி மன்ற தலைவர் அய்யனார், செஞ்சி வார்டு உறுப்பினர்கள் எஸ். எஸ்.சீனிவாசன், பொன்னம்பலம், கோட்டசிவகுமார்,அரசு ஒப்பந்ததாரர் கோடீஸ்வரன், அன்னையேறி ரவி, ஆலம் பூண்டி பச்சையப்பன், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.



செங்கல்பட்டு மாவட்ட ஆட்சியர் அலுவலக குறை தீர்ப்பு கூட்டத்தில் நடைபெற்ற மக்கள் நலன் காக்கும் நலம் முகாமில் 312 மனுக்களை பெற்றுக்கொண்ட மாவட்ட வருவாய் அலுவலர் கணேஷ் குமார் நலத்திட்ட உதவிகளை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் மாவட்ட மாற்றுத்திறனாளி அலுவலர் கதிர்வேல் அரசு அலுவலர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

# காங். கிராம கமிட்டி உறுப்பினர் அடையாள அட்டை வழங்கும் விழா



திருவள்ளூர், மார்ச். 12–

திருவள்ளூர் வடக்கு மாவட்ட காங்கிரஸ் கமிட்டிக்கு உட்பட்ட பகுதிகளைச் சேர்ந்த கிராம கமிட்டி உறுப்பினர்களுக்கான அடையாள அட்டைகள் வழங்கும் விழா சிறப்பாக நடைபெற்றது.

திருவள்ளூரில் உள்ள காங்கிரஸ் அலுவலகத்தில் நடைபெற்ற விழாவுக்கு தமிழ்நாடு மாநில இளைஞர் காங்கிரஸ் செயலாளர் ஏ. திவாகர் தலைமை தாங்கினார்.

திருவள்ளூர் மற்றும் திருத்தணி சட்டப்பேரவை தொகுதிக்கு உட்பட்ட கிராம கமிட்டி உறுப்பினர்களுக்கான அடையாள அட்டைகளை திருவள்ளூர் வடக்கு மாவட்ட காங்கிரஸ் தலைவர் சசிகுமார் வழங்கினார்.

ஒவ்வொரு பகுதியில் உள்ள கிராம கமிட்டி உறுப்பினர்களுக்கு அடையாள அட்டைகளை வழங்கி அவற்றை புகைப்படம் எடுத்து மாவட்ட மற்றும் மாநில தலைமைக்கு அனுப்பி வைக்குமாறு சசிகுமார் கேட்டுக்கொள்ளப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் ஓபிசி அணி செயலாளர் வெங்கடேசன், மாவட்ட துணைத் தலைவர் டி. செந்தில்குமார் நிர்வாகிகள் ஸ்டாலின், சதீஷ், ரவிக்குமார், மணவாளன், மாயாண்டி, கோவிந்தசாமி, ராமன், செல்வம், சிவகுமார், கிருஷ்ணன், தேவராஜ், கலீல் ரகுமான், லத்திப், பிரகாஷ் ,

பழனி, கோபி, செல்வகுமார், சந்துரு, ஹரி, சைமன் உள்ளிட்டோர் கலந்து கொண்டு அடையாள அட்டைகளை பெற்றுக் கொண்டனர்.

இந்நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை திருவள்ளூர் வடக்கு மாவட்ட காங்கிரஸ் கமிட்டி தலைவர் வழக்கறிஞர் சசிகுமார் செய்திருந்தார்.



இந்திய தேர்தல் ஆணையம் சார்பில் சென்னையில் நடைபெற்ற மாவட்ட தேர்தல் அலுவலர்களுக்கான தேர்தல் மேலாண்மை பயிற்சி முகாமில் கன்னியாகுமரி மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் ஆர்.அழகுமீனா கலந்து கொண்டனர்.

# தூத்துக்குடி யூனியன் அய்யனடைப்பு கிராமத்தில் புதிய ரேசன் கடை கட்டுவதற்கான பணி

## எம்.எல்.ஏ. அடிக்கல் நாட்டி தொடங்கி வைத்தார்



தூத்துக்குடி, மார்ச். 12–

தூத்துக்குடி ஊராட்சி ஒன்றியம், ஒட்டபிடாரம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட அய்யனடைப்பு கிராமத்தில் ரூ.15.50 லட்சம் மதிப்பீட்டில் புதிய ரேஷன் கடை கட்டுவதற்கான பணிகளை ஒட்டப்பிடாரம் சட்டமன்ற உறுப்பினர் எம்.சி.சண்முகையா அடிக்கல் நாட்டி தொடங்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில், தூத்துக்குடி ஊராட்சி ஒன்றிய உதவி பொறியாளர் ரவி, வருவாய் ஆய்வாளர் மேகலா, தூத்துக்குடி மத்திய ஒன்றிய திமுக துணை செயலாளர் ஹரி பாலகிருஷ்ணன், இலக்கிய பகுத்தறிவு பேரவை தலைவர் ச.த.பொன்னரசு உள்ளிட்ட நிர்வாகிகள் மற்றும் ஊர் பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்.

தொடர்ந்து, சேதமடைந்து பயனற்று கிடக்கும் அய்யனடைப்பு ஊராட்சி மன்ற அலுவலகத்தை பார்வையிட்ட எம்.சி.சண்முகையா எம்எல்ஏ. பொதுமக்களின் கோரிக்கையை ஏற்று, அக்கட்டிடத்தை மக்கள் பயன்பெறும் வகையில் புதிய திட்டங்களின்படி, கட்டி தருவதாக உறுதி கூறினார். முன்னதாக, எம்எல்ஏவுக்கு இளைஞரணி, ஊர் மக்கள் சார்பில் சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது.

திருவண்ணாமலை மாவட்டம்

# காட்டுமலையனூர் அரசு பள்ளியில் ஆண்டு விழா



திருவண்ணாமலை, மார்ச். 12–

காட்டுமலையனூர் ஊராட்சி ஒன்றிய ஆரம்பப்பள்ளியில் ஆண்டு விழா நடைபெற்றது. தலைமை ஆசிரியர் மாலா தலைமை தாங்கினார். பள்ளி மேலாண்மைக் குழு தலைவர் புஷ்பா முன்னிலை வகித்தார். ஆசிரியர் வீரன் எல்லோரையும் வரவேற்று அறிக்கை வாசித்தார். கீழ்பென்னாத்தூர் வட்டாரக் கல்வி அலுவலர்கள் ஸ்ரீராமுலு, ஜோதி ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகப் பங்கேற்று பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கும், கலை நிகழ்ச்சிகளில் பங்கேற்ற மாணவர்களுக்கும் பரிசுகள் வழங்கி விழாப் பேருரை ஆற்றினர். ஆசிரியர் பயிற்றுநர் அனிதா, ஜமீன் அகரம் தலைமை ஆசிரியர் முருகன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். விழாவில் மாணவர்கள் நடனம் ஆடினர். நாடகம் மற்றும் பட்டிமன்றம் நடத்தினர். திருக்குறள் ஒப்புவித்தனர். பாடல் பாடினர். உரையாற்றினர்.

நிகழ்வில் அருகாமைப் பள்ளிதலைமைஆசிரியர்கள் ஜெயலட்சுமி, சித்ரா, ஆசிரியர்கள்லில்லிஅருணா, சுமதி உள்ளிட்டோர் பங்கேற்ற னர். ஆசிரியர் ஏழுமலை நன்றி கூறினார்.

மண்டைக்காடு பகவதி அம்மன் கோவில் திருவிழா பாதுகாப்பு பணியில் ஈடுபட்ட

# நூறு சதவிகித பாதுகாப்பை உறுதி செய்த அதிகாரிகளுக்கு, காவலர்களுக்கு எஸ்.பி. பாராட்டு



கன்னியாகுமரி, மார்ச். 12–

கன்னியாகுமரிமாவட்ட காவல் கண்காணிப்பாளர் இரா ஸ்டாலின் நேரடி மேற்பார்வையில் நடந்த மண்டைக்காடு பகவதி அம்மன் கோவில் திருவிழா பாதுகாப்பு பணி சிறிய அசம்பாவிதங்கள் ஏதுமின்றி சிறப்பான முறையில் நடந்து முடிந்துள்ளது.

கன்னியாகுமரி மாவட்டம் மண்டைக்காடு பகவதி அம்மன் திருவிழாவானது 01.03.2026 ம் கொடியேறி நடைபெற்று வந்தது.

மேலும் பாதுகாப்பு பணிக்காக மாவட்ட காவல்துறை சார்பாக CCTV கண்காணிப்பு கண்காணிப்பு கோபுரங்கள்மூன்றடுக்கு கடற்கரை பாதுகாப்பு முதலுதவி ஏற்பாடுகள் பக்தர்களுக்கு வழிகாட்ட பேனர்கள் அமைப்பு பாதுகாப்பு எண்கள் டிரம்பில் வைக்கப்பட்ட கடல்நீர்தற்காலிக பேருந்து நிறுத்தம் செய்யும் இடங்கள் பார்க்கிங் வசதிகள் காவல் கட்டுப்பாட்டு அறை பல்வேறு சிறப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டது.

இந்நிலையில் மண்டைக்காடு திருவிழா கூட்ட நெரிசலில் காணாமல் போன குழந்தை மற்றும் பொதுமக்கள் தவறவிட்ட செல்போன்கள், மணிபர்ஸ் ஆகியவற்றை போலீசார் மீட்டு உரியவர்களிடம் ஒப்படைத்தார்.

மேலும் பக்தர்கள் எந்த இடையூறு இன்றி தரிசனம் செய்யும் வகையில் போக்குவரத்து வசதிகள் மற்றும் பார்க்கிங் வசதிகள் ஏற்படுத்தப்பட்டிருந்தது.

சிறப்பாக செயல்பட்டு பொதுமக்களில் பாதுகாப்பை உறுதி செய்த காவல் அதிகாரிகள் மற்றும்போலீசாரைமாவட்ட காவல் கண்காணிப்பாளர் பாராட்டினார்.



சிவகங்கை நகராட்சி பகுதியில் ஒருங்கிணைந்த ஒப்படைக்கப்பட்ட வருவாய் திட்டம் 2023 – 2024ன் கீழ் ரூபாய் 551.50 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள புதிய ஊராட்சி ஒன்றிய அலுவலக கட்டிடமானது தமிழ்நாடு முதலமைச்சரால் கானொலி காட்சி வாயிலாக திறந்து வைக்கப்பட்டுள்ள நிகழ்வினைத் தொடர்ந்து, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர், முன்னாள் சிவகங்கை ஊராட்சி ஒன்றிய குழு தலைவர் மற்றும் சிவகங்கை நகர்மன்ற தலைவர் ஆகியோர் குத்துவிளக்கேற்றி வைத்து சிறப்பித்தனர். இந்நிகழ்ச்சிகளில், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் மரு.ஜி.அரவிந்த் , மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் செயற்பொறியாளர் இந்துமதி, சிவகங்கை நகர்மன்ற தலைவர் சி.எம். துரை ஆனந்த், முன்னாள் சிவகங்கை ஊராட்சி ஒன்றியக்குழு தலைவர் மஞ்சுளா பாலசந்தர், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் செழியன் (சிவகங்கை) மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



கோவைமாவட்டம்சர்க்கார்சமக்குளம்பகுதியில்பத்திரபதிவுதுறைஅலுவலகத்தைதமிழ்நாடுமுதலமைச்சர்காணொலி காட்சி மூலமாக திறந்து வைத்தார். இப்பத்திர பதிவு துறையானது அக்ரஹாரசாமக்குளம், கொண்டையம்பாளையம், இடிகரை, கீரணத்தம், வெள்ளமடை, சர்க்கார் சமக்குளம் உட்பட்ட பகுதிகள் உட்படுத்தப்பட்டதாகும். இதில் பதிவுத்துறை தலைவர் தினேஷ் பொன்ராஜ், துணைப்பதிவுத்துறை தலைவர் பிரபாகர், தெற்கு தணிக்கை மாவட்ட பதிவாளர் சிவராஜ், கோவை வடக்கு மாவட்ட பதிவாளர்கள் பிரபாவதி , அனுஸ்வாதிகா, சார்கார் சமக்குளம் பதிவாளர் சங்கர்மூர்த்தி, சர்கார் சமக்குளம் ஒன்றிய செயலாளர் எஸ்.பி. சுரேஷ்குமார், கவுண்டம்பாளையம் அதிமுக சட்டமன்ற உறுப்பினர் PRG அருண்குமார், பெரியநாயக்கன் பாளையம் பாண்டித்துறை பத்திர ஆலுவலகம் உரிமையாளர் கவிதாமந்திரி, ஸ்ரீவாரிமகால் அரவிந்த், கோவில்பாளையம் GPD சர்க்கரை நோய் சிகிச்சை மையம் பிரியதர்ஷினி மற்றும் எராளமனோர் கலந்து கொண்டனர்.






தேனி மாவட்டம் கம்பம் போக்குவரத்து காவல் நிலைய காவல் ஆய்வாளராக அ.தங்கமணி பொறுப்பேற்றுக் கொண்ட போது எடுத்த படம்.

கோவை மாவட்டம் ஒருங்கிணைந்த பைத்துல்மால் துவக்க விழா, யுகே உம்மர்கத்தாப் இல்லத்தில் 26 ஆம் ஆண்டு இப்தார் நிகழ்ச்சி மற்றும் தமிழ்நாடு அரசு வழங்கிய காமராஜர் விருது பெற்ற எஸ்.எம். இதயத்துல்லாவிற்கு பாராட்டு விழா என முப்பெரும் விழா கோவை போத்தனூரில் உள்ள தனியார் திருமண மண்டபத்தில் நடைபெற்றது. இந்தநிகழ்ச்சிக்கு உதவும் கைகள் அறக்கட்டளை தலைவர் மற்றும் சி.சி.ஏ.டி.ஏ செயலாளர் யுகே உமர் கதாப் தலைமை வகித்தார். சிறப்பு அழைப்பாளர்களாக எஸ்.எம் ஹிதயத்துல்லா கலந்து கொண்டார். கலீமுத்தீன் முன்னிலை வகித்தார். கோவை அத்தார் ஜமாத் பள்ளிவாசல் தலைமை இமாம் இப்ராகிம் பாகவி, கோவை மாநகர அனைத்து வியாபாரிகள் சங்கம் சி.சி.ஏ.டி.ஏ தலைவர் அனுபவி, டி.என்.சி.சி மாநில தலைவர் எம்.என் கந்தசாமி, மாநிலத் துணைத் தலைவர் அழகு ஜெயபால், காங்கிரஸ் மாநில செயல் தலைவி காயத்ரி மற்றும்அனைத்துகட்சிநிர்வாகிகளும்பொதுமக்களும் கலந்து கொண்டு நிகழ்ச்சியை சிறப்பித்தனர்

# திருச்சிராப்பள்ளியிலிருந்து ஐந்து புதிய ரயில் சேவைகள்; பிரதமர் தொடங்கி வைத்தார்

திருச்சிராப்பள்ளி, மார்ச், 12:

இரண்டு அமிர்த பாரத் எக்ஸ்பிரஸ், இரண்டு எக்ஸ்பிரஸ் ரயில்கள் மற்றும் ஒரு மெமு (MEMU) ரயில் சேவை தொடங்கப்பட்டுள்ளது.



திருச்சிராப்பள்ளியில் நேற்று (11 மார்ச் 2026) நடைபெற்ற பல்வேறு அமைச்சகங்கள்பங்கேற்ற விழாவில், பிரதமர் நரேந்திர மோடி ஐந்து புதிய ரயில் சேவைகளைத் தொடங்கி வைத்தார். இது தமிழ்நாடு மற்றும் நாட்டின் பிற பகுதிகளுக்கு இடையிலான ரயில் இணைப்பை வலுப்படுத்துவதற்கான ஒரு முக்கிய நடவடிக்கையாக அமைந்துள்ளது.

அறிமுகப்படுத்தப்பட்ட புதிய சேவைகளில் இரண்டு அமிர்த பாரத் எக்ஸ்பிரஸ் ரயில்கள், இரண்டு எக்ஸ்பிரஸ் ரயில்கள் மற்றும் ஒரு மெமு (MEMU) ரயில் சேவை ஆகியவை அடங்கும். இவை நீண்ட தூர பயண இணைப்பை மேம்படுத்துவதோடு, மேற்கு கடற்கரை வழித்தடத்தை வலுப்படுத்தவும், தமிழ்நாட்டிற்குள் பிராந்திய போக்குவரத்தை மேம்படுத்தவும் உதவும். திருச்சிராப்பள்ளியில் நடைபெற்ற இந்த முக்கிய விழாவில், மத்திய வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சர் பியூஷ் கோயல், மத்திய நாடாளுமன்ற விவகாரங்கள் மற்றும் தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் எல். முருகன் மற்றும் தமிழ்நாடு அரசின் தொல்லியல் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு ஆகியோருடன் ரயில்வே மூத்த அதிகாரிகள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர். உள்ளூர் தொடக்க விழாக்கள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த அனைத்து இடங்களிலும் இந்த நிகழ்ச்சி நேரலையாக ஒளிபரப்பப்பட்டது. இதன் மூலம் மாநிலம் முழுவதும் உள்ள மக்கள் இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க தொடக்க நிகழ்வைக் காண முடிந்தது.

தொடங்கி வைக்கப்பட்ட சேவைகளில் 2 அமிர்த பாரத் எக்ஸ்பிரஸ் ரயில்கள் அடங்கும். இவை குறைந்த கட்டணத்தில் மேம்படுத்தப்பட்ட வசதிகளுடனும், நவீன நவீன உட்கட்டமைப்புடனும் பயணிகளுக்கு வசதியான பயணத்தை வழங்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளன.

நாகர்கோவில் சார்லப்பள்ளி (ஹைதராபாத்) அமிர்த பாரத் எக்ஸ்பிரஸ்:

இது தமிழ்நாட்டின் தென்முனையை, வேகமாக வளர்ந்து வரும் தகவல் தொழில்நுட்ப மற்றும் நிர்வாக மையமான ஹைதராபாத்துடன் இணைக்கிறது. இந்த சேவை தமிழ்நாடு, ஆந்திரப் பிரதேசம் மற்றும் தெலுங்கானா மாநிலங்களுக்கு இடையே பயணிக்கும் மாணவர்கள், பணியாளர்கள் மற்றும் யாத்ரீகர்களுக்குப் பெரிதும் பயனளிக்கும்.

போத்தனூர் (கோயம்புத்தூர்) தன்பாத் அமிர்த பாரத் எக்ஸ்பிரஸ்:

இது மேற்கு தமிழ்நாட்டின் ஜவுளி மையத்திற்கும், கிழக்கு இந்தியாவின் தாது மற்றும் தொழில் மண்டலத்திற்கும் இடையே நீண்ட தூர ரயில் இணைப்பை உருவாக்குகிறது. இது இரு பிராந்தியங்களுக்கும் இடையே தொழிலாளர்கள், வர்த்தகர்கள் மற்றும் மாணவர்களின் போக்குவரத்தை எளிதாக்கும். இந்த ரயில்கள் பணிச்சூழலுக்கு ஏற்ற இருக்கைகள், மொபைல் சார்ஜிங் பாயிண்ட்கள் மற்றும் மேம்படுத்தப்பட்ட பாதுகாப்பு அம்சங்கள் உள்ளிட்ட நவீன வசதிகளைக் கொண்டுள்ளன. இதிலுள்ள ‘புஷ்புல்’ (Pushpull) தொழில்நுட்பம் ரயிலின் வேகத்தை விரைவாக அதிகரிக்கவும், சுமூகமான பயண அனுபவத்தை வழங்கவும் உறுதி செய்கிறது.

மேற்கு கடற்கரை வழித்தடத்தில் இணைப்பை வலுப்படுத்தும் வகையில் இரண்டு புதிய எக்ஸ்பிரஸ் சேவைகளும் தொடங்கப்பட்டன.

ராமேஸ்வரம் மங்களூரு எக்ஸ்பிரஸ்:

இது வங்காள விரிகுடாவில் உள்ள புனித யாத்திரை மையமான ராமேஸ்வரத்தையும், அரபிக்கடலில் உள்ள துறைமுக நகரமான மங்களூருவையும் இணைக்கிறது. இந்த ரயில் சுற்றுலாத் துறையை மேம்படுத்துவதோடு தமிழ்நாடு, கேரளா மற்றும் கர்நாடகா மாநிலங்களுக்கு இடையே தடையற்ற பயணத்தை வழங்கும்.

திருநெல்வேலி மங்களூரு எக்ஸ்பிரஸ்:

இது தென் மாவட்டமான திருநெல்வேலியை கடலோர கர்நாடகாவுடன் இணைப்பதோடு, கேரளாவின் முக்கிய மாவட்டங்கள் வழியாக வசதியான பயண இணைப்பை வழங்குகிறது. இந்த சேவை மாநிலங்களுக்கு இடையே பயணிப்போர், மாணவர்கள் மற்றும் சிறப்பு மருத்துவ சிகிச்சைக்காக பயணம் செய்யும் நோயாளிகளுக்குப் பெரிதும் பயனளிக்கும்.

டெல்டா பகுதியில் பிராந்திய இணைப்பை வலுப்படுத்துதல்

தமிழ்நாட்டிற்குள் பிராந்திய இணைப்பை மேம்படுத்த, மயிலாடுதுறை திருவாரூர் காரைக்குடி மெமு (MEMU) ரயில் சேவையும் தொடங்கி வைக்கப்பட்டது. இந்த புதிய சேவை டெல்டா மாவட்டங்களில் உள்ள தினசரி பயணிகள், மாணவர்கள் மற்றும் வியாபாரிகளுக்கு மலிவான மற்றும் நம்பகமான போக்குவரத்து வசதியை அளித்து அவர்களுக்குப் பெரும் நன்மையைத் தரும்.

ரயில்கள் புறப்படும் நிலையங்களில் உள்ளூர் தொடக்க விழாக்கள் ஏற்பாடு செய்யப்பட்டன. இதில் மக்கள் பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டு புதிய ரயில் சேவைகளை வரவேற்றனர். மயிலாடுதுறையில் நடைபெற்ற உள்ளூர் விழாவில், மயிலாடுதுறை சட்டமன்றத் தொகுதி உறுப்பினர் எஸ். ராஜகுமார் மற்றும் மயிலாடுதுறை நகராட்சித் தலைவர் என். செல்வராஜ் ஆகியோர்கலந்துகொண்டனர். போத்தனூரில் நடைபெற்ற உள்ளூர்விழாவில், சட்டமன்ற உறுப்பினர் எஸ். தாமோதரன் கலந்து கொண்டார். நாகர்கோவில், ராமேஸ்வரம் மற்றும் திருநெல்வேலி உள்ளிட்ட பிற இடங்களிலும் இதேபோன்ற தொடக்கவிழாக்கள் ஒருங்கிணைக்கப்பட்டன. இதில் ரயில்வே அதிகாரிகள், மக்கள் பிரதிநிதிகள் மற்றும் பயணிகள் உற்சாகத்துடன் பங்கேற்றனர். புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட இந்த சேவைகள் தமிழ்நாடு மற்றும் அண்டை மாநிலங்களான ஆந்திரப் பிரதேசம், தெலுங்கானா, கேரளா, கர்நாடகா, ஒடிசா மற்றும் ஜார்கண்ட் இடையேயான இணைப்பை கணிசமாக மேம்படுத்தும். முக்கிய பொருளாதார மையங்கள், யாத்திரை தலங்கள் மற்றும் கல்வி மையங்களை இணைப்பதன் மூலம், இந்த ரயில்கள் சுற்றுலாவை மேம்படுத்தி, மக்களின் இடப்பெயர்வை எளிதாக்கி, பிராந்திய பொருளாதார வளர்ச்சிக்கு உறுதுணையாக இருக்கும்.

# திருவைகுண்டம் தொகுதியில் போட்டியிட திமுக ஐடி விங் மாவட்ட ஒருங்கிணைப்பாளர் விருப்பமனு

தூத்துக்குடி,

தமிழகத்தில் நடைபெற உள்ள 2026 சட்டமன்ற தேர்தலில் ஆளும் கட்சியான திராவிட முன்னேற்ற கழகம் சார்பில் பல்லாயிரக்கணக்கான திமுக நிர்வாகிகள் போட்டியிட விருப்பம் தெரிவித்து திமுக தலைமை அலுவலகமான அண்ணா அறிவாலயத்தில் விருப்ப மனுவை தாக்கல் செய்துள்ளனர். இதில் திமுகவின் முக்கிய அணியான இளைஞரணி நிர்வாகிகள் ஏராளமானோர் விருப்பமனு தாக்கல் செய்த நிலையில், திமுக தகவல் தொழில்நுட்ப அணியின் மாநில நிர்வாகிகள் மற்றும் மாவட்ட ஒருங்கிணைப்பாளர்களும் தேர்தலில் போட்டியிட வேண்டி விருப்பமனு அளித்துள்ளனர். இந்நிலையில் தூத்துக்குடி மாவட்டம், திருவைகுண்டம் சட்டமன்ற தொகுதியில் தூத்துக்குடி தெற்கு மாவட்ட திமுக தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் பேரின்ப ராஜ்லாசரஸ், போட்டியிட வேண்டி தோழப்பன் பண்ணை முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் காசிராஜன் மகன் அயலக அணி (சுவீடன்) பாலசுப்பிரமணியன் காசிராஜன் ஏற்பாட்டில், தூத்துக்குடி தெற்கு மாவட்ட திமுக விவசாய தொழிலாளர் அணி துணை அமைப்பாளர் மாரியப்பன் மகேஷ் அண்ணா அறிவாலயத்தில் விருப்ப மனு அளித்துள்ளனர்.



# பூட்டுதாக்கு ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளி நூற்றாண்டு விழா அமைச்சர் ஆர்.காந்தி நினைவு பரிசு வழங்கி பாராட்டு

ஆற்காடு, மார்ச், 11

ஆற்காடு அடுத்த பூட்டுத்தாக்கு ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளி நூற்றாண்டு விழாவில் கலந்து கொண்ட அமைச்சர் ஆர். காந்தி நினைவு பரிசை வழங்கி பாராட்டினார்.

ராணிப்பேட்டை மாவட்டம் ஆற்காடு அடுத்த பூட்டு தாக்கு ஊராட்சி ஒன்றிய துவக்கப் பள்ளி கடந்த 16 மார்ச் 1926 ஆம் துவங்கப்பட்டு இயங்கி வருகின்றது. இந்நிலையில் நூற்றாண்டு விழா நேற்று முன்தினம் பள்ளி வளாகத்தில் நடந்தது பள்ளி தலைமை ஆசிரியை விஜயலட்சுமி தலைமை தாங்கினார். இதில் ஊராட்சி மன்ற தலைவர் ஆற்காடு யூனியன் சேர்மன் புவனேஸ்வரி சத்தியநாதன், துணை சேர்மன் ஸ்ரீமதி நந்தகுமார், முன்னிலை வகித்தனர். பூட்டு தாக்கு பஞ்சாயத்து தலைவர் அருண், துணைத்தலைவர் சசிகலா வரவேற்றினர், மாவட்ட தொடக்க கல்வி அலுவலர் சிவராமன், வட்டார கல்வி அலுவலர் ராஜா, முன்னாள் மாணவர் மக்கள் நீதி மையம் மாவட்ட செயலாளர் கிருஷ்ணமூர்த்தி, இரத்தினகிரி பாலமுருகன் அடிமை சுவாமிகள், ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர், அதனைத் தொடர்ந்துசிறப்புஅழைப்பாளராக கலந்து கொண்ட கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர் ஆர். காந்தி பள்ளி மாணவர்களுக்கு பரிசுகளை வழங்கி பேசினார் கல்வி மனிதனுக்கு அவசியம் தன்னை அடையாளப்படுத்திக் கொள்ள அழியாத செல்வமாய் விளங்குவது கல்வி ஒன்று மனிதனின் எந்தப் பிறவியிலும் உடன் வருவது கல்வி அறிவே சமூகத்தின் சான்றோனாய் உயர்த்திடுவது கல்வியே தமிழக முதலமைச்சர் ஸ்டாலின் உலகமே வியக்கும் பல நல்ல திட்டங்களை கல்விக்காக முக்கியத்துவம் அளித்து செயல்படுத்தி வருகிறார் குறிப்பாய் காலை உணவு திட்டம் பிறருக்கு எடுத்துக்காட்டாய் உள்ளது, நான் முதல்வர் திட்டத்தின் பயிற்சி பெற்றவர்கள் 56 பேர் யுபிஎஸ்சி. தேர்வில் வெற்றி பெற்றுள்ளனர். தமிழகம் அனைத்திலும் முன்னோடியாக உள்ளது நூற்றாண்டு கண்டுள்ள இப்பள்ளி மென்மேலும் வளர வாழ்த்துக்கள் என்றார் முன்னதாக பள்ளி மாணவர்களின் கலை நிகழ்ச்சிகள் நடந்தன. விழாவில் வட்டாட்சியர் நடராஜன், வட்டார வளர்ச்சி அலுவலர் கல்ரவி, துணை வட்டாட்சியர் சுரேஷ், மற்றும் ஊராட்சி மன்ற உறுப்பினர்கள் ஆசிரியர்கள் பெற்றோர் சமூக ஆர்வலர்கள் உள்பட பலர் கலந்து கொண்டனர்.






# கீரமங்கலம் மேற்பனைக்காடு அருள்மிகு வீரமாகாளியம்மன் கோயிலில் மழை வேண்டி நடைபெற்ற மது எடுப்பு திருவிழா

ஆலங்குடி மார்ச் 12

புதுக்கோட்டை மாவட்டம் கீரமங்கலம் அருகே உள்ள மேற்பனைக்காடு கிராமத்தில் வீரமாகாளியம்மன் கோயில் அமைந்துள்ளது. இக்கோவில் அப்பகுதியில் உள்ள பிரசித்தி பெற்ற கோவில்களில் ஒன்றாக உள்ளது. இக்கோவில் ஒவ்வொரு ஆண்டும் மாசி மாதம் திருவிழா நடைபெறுவது வழக்கம். அதன்படி இந்த ஆண்டு இக்கோயிலின்மதுஎடுப்பு திருவிழா நேற்று வெகு விமர்சையாக நடைபெற்றது.

இந்த ஆண்டு நல்ல மழை பெய்து விவசாயம் செழிக்க வேண்டியும் நோய் நொடி இல்லாமல் மக்கள் வாழ வேண்டும் என்பதற்காகவும் நடைபெற்ற இந்த மது எடுப்பு திருவிழாவில் மேற்பனைக்காடு கிராமத்தை சேர்ந்த ஆயிரக்கணக்கான பெண்கள்தலையில் தென்னம் பாலைகளை குடத்தில் வைத்து அதனை அலங்கரித்து தலையில் சுமந்தவாறு கும்மியடித்தும் குலவையிட்டவாரும் மது குடங்களை சுமந்து ஊர்வலமாக வந்து கோயில் வளாகத்தை மூன்று முறை சுற்றி அம்மனை வழிபட்டனர்.




இவ்வாறு மாசி மாதம் திருவிழா நடத்தபடுவதன் மூலம் அந்த ஆண்டு நல்ல மழை பெய்து விவசாயம் செழிக்கும் என்பது அப்பகுதி மக்களின் நம்பிக்கையாக உள்ளது.

மேலும் அங்கு திரண்ட பல்லாயிரக்கணக்கான பொதுமக்கள் மற்றும் பக்தர்கள் இந்த ஆண்டு நல்ல மழை பெய்து விவசாயம் செழித்து மக்கள் நோய் நொடி இல்லாமல் வாழ வேண்டும் என கூட்டு வழிபாட்டு பிரார்த்தனைகளில் ஈடுபட்டனர்.

நிகழ்வில் சுற்றுவட்டார பக்தர்கள் பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தனர்.

# திருச்சிராப்பள்ளியில் பிரதமர் தொடங்கி வைத்த ரூ. 5650 கோடி மதிப்பிலான பல்வேறு திட்டங்கள்!

தமிழ்நாட்டில் உள்கட்டமைப்பு மற்றும் பொருளாதாரத்தை மேம்படுத்தும் நோக்கத்துடன் ஏராளமான மாற்றகரமான வளர்ச்சித் திட்டங்களைத் தொடங்கி வைப்பதற்காக, பிரதமர் நரேந்திர மோடி நேற்று திருச்சி மாநகருக்கு வந்திருந்தார். தூய்மையான எரிசக்தி, பெட்ரோலியம் சார்ந்த உற்பத்தி மற்றும் நெடுஞ்சாலைகள், ரயில்வே, கிராமப்புற சாலைகளின் வாயிலாக மேம்படுத்தப்பட்ட பன்முக இணைப்பு போன்ற துறைகளில் 5650 கோடி ரூபாய் மதிப்பிலான திட்டங்கள் இதில் அடங்கும். “இந்தத் திட்டங்கள் எரிசக்தி அணுகல் மற்றும் இணைப்பை ஊக்குவிப்பதுடன், தமிழ்நாட்டு இளைஞர்களுக்கு ஆயிரக்கணக்கான வேலை வாய்ப்புகளைஉருவாக்கும்”, என்று நிகழ்ச்சியில் பேசுகையில் பிரதமர் கூறினார்.



நிலையான எரிசக்தியில் கவனம் செலுத்தும் வகையில், பாரத் பெட்ரோலியம் கார்ப்பரேஷன் நிறுவனத்தின் நகர எரிவாயு விநியோக வலையமைப்பிற்கு பிரதமர் அடிக்கல் நாட்டினார்.

3700 கோடி ரூபாய் மதிப்பிலான இந்தத் திட்டம், நீலகிரி மற்றும் ஈரோடு மாவட்டங்களில் சுமார் ஒன்பது லட்சம் குடும்பங்களுக்கும், ஏராளமான வணிக நிறுவனங்களுக்கும் குழாய் மூலம் இயற்கை எரிவாயு இணைப்புகளை வழங்கி புதிய மாற்றத்தை ஏற்படுத்தஉள்ளது. இந்தத்திட்டத்தினால் ஏற்படும் சுற்றுச்சூழல் நன்மைகளை சுட்டிக்காட்டிய பிரதமர், “எட்டு ஆண்டுகளில் இந்தத் திட்டத்தினால் ஏற்படும் நேர்மறையான சுற்றுச்சூழல் சார்ந்த தாக்கம், நான்கு கோடி மரங்களை நடுவதற்குச் சமமாக இருக்கும்”, என்று குறிப்பிட்டார். சென்னையில் அர்ப்பணிக்கப்பட்ட இந்தியன் ஆயில் கார்ப்பரேஷனின் மசகு எண்ணெய் கலவை ஆலை, இந்தியாவின் மிக பிரம்மாண்டமான ஆலைகளுள் ஒன்றாகும். 370 கிலோ மீட்டர் நீளம் உள்ள கிராமப்புற சாலைகளை திறந்து வைத்திருக்கிறோம், இந்தச் சாலைகள், கிராமப்புற பொருளாதாரத்தை மேம்படுத்தி, எளிதான வாழ்க்கைக்கு வழிவகை செய்கிறது. துவங்கப்பட்டுள்ள ஏராளமான புதியரயில்சேவைகள், சுற்றுலாவை அதிகரிக்கும், உள்ளூர் பொருளாதாரத்தை ஊக்குவிக்கும், இளைஞர்களுக்கு ஏராளமான வேலைகளை உருவாக்கும். வளர்ச்சியடைந்த இந்தியாவை அடைய, வளர்ச்சியடைந்த தமிழ்நாட்டை உருவாக்குவது தான் எங்கள் இலக்கு என்றும் பிரதமர் குறிப்பிட்டார்.

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJAV. CELL: 9443699066